**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
**CC.No. 45/2024**

Name : செல்வராஜ் (PW4)
Date: 04.07.2025
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் பணிபுரியும் பள்ளியில் தொடக்க பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளி உள்ளது என்றால் சரிதான். நான் தொடக்கப்பள்ளியில் பணிபுரிகிறேன். தொடக்க பள்ளிக்கு தலைமை ஆசிரியர் கிரிஜா. மேற்படி கிரிஜா ஆசிரியரின் கீழ் தான் நான் பணிபுரிகிறேன் என்றால் சரிதான். எதிரி பெரியசாமி உயர்நிலைபள்ளியின் தலைமை ஆசிரியர் என்றால் சரிதான். பணி நிமித்தமாகவும் மற்ற பணிகள் சம்பந்தமாக தலைமை ஆசிரியரான எதிரிக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். எதிரி பெரியசாமிக்கும் எனது பணிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தொடக்க பள்ளியின் தலைமை ஆசிரியர் பள்ளி செயலாளர் ஆகியோர்களுக்கு தான் எங்கள் பணி நிமித்தமான தொடர்பு உண்டு என்றால் சரிதான்.

2. 11.06.2018 ம் தேதியில் எங்கள் தொடக்க பள்ளியில் தலைமை ஆசிரியர் இல்லை என்றால் சரிதான். 11.06.2016 க்கும் 15.06.2016க்கும் இடைப்பட்ட நாட்களில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும்தொகை பற்றி எங்கள் தலைமை ஆசிரியரிடம் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. 29.07.2017ல் நான் பெற்ற ஊதியத்தை எனது ஊதிய கணக்கில் காண்பித்துள்ளேன். நான் அறக்கட்டளைக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் தொகை ரூ.4,10,000த்தை கணக்கில் காண்பிக்கவில்லை. எதிரி கொடுக்கப்பட்டதாக தொகையை உண்மையில் கொடுத்திருந்தால் கணக்கில் காண்பித்திருப்பேன் என்றால் அறக்கட்டளைக்கு நன்கொடையாக கொடுத்தால் வருமானவரி கணக்கில் காண்பிக்கவில்லை.

3. எதிரி பணம் கேட்டார் என்ற விபரத்தை அறக்கட்டளை செயலாளரிடம் நான் பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்பாக சென்று கேட்டேனா என்றால் இல்லை, ஏனென்றால் அவர் அறக்கட்டளை செயலாளரிடம் பரிச்சயமாக இருந்ததால் சொல்லவில்லை. நான் டிப்ளமோ டீச்சர்ஸ் படித்துள்ளேன். எனக்கும், எதிரிக்கும் வங்கி கணக்கு இருக்கும்பட்சத்தில் நான் கொடுத்ததாக சொல்லும் பணத்தை வங்கி மூலமாக ஏன் அனுப்பவில்லை என்றால் அறக்கட்டளைக்கு தருவதாக எதிரி குறிப்பிட்டதால் அதை நான்

ரொக்கமாக கொடுத்தேன், அவர் வங்கிகணக்கிற்கு அனுப்பவில்லை. அறக்கட்டளையின் வங்கிகணக்கை எதிரியிடம் கேட்டு பணம் அனுப்ப நான் முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை. நான் என்னுடைய காசோலை மூலமாக மொத்தம் ரூ.5,25,000 வங்கியில் எடுத்த போது எதிரி உடன் இருந்ததால் அவரிடம் ரூ.4,10,000த்தை அப்படியோ ரொக்கமாக கொடுத்துவிட்டேன். மீதி ரூ.1,15,000த்தை நான் வைத்து கொண்டேன். மேற்படி ரூ.4,10,000 அறக்கட்டளையே என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டதா என்றால் இல்லை எதிரிதான் பெற்றுக்கொண்டார்.

4. எனது சாட்சியத்திற்கு முரணாக சொல்லும் நிலையில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வருமானவரி கணக்கு எவ்வாறு செலுத்துகிறேன் என்றால் எங்களது சங்கத்தின் மூலுமாக செலுத்துகிறேன். ஒரு படித்த நபரான நான் வருமானவரி கணக்கை சங்கத்தின் மூலமாக கட்டக்கூடாது என்பது எனக்கு தெரியும். முறைப்படி கணக்கு வழக்குகள் செலுத்தாத காரணத்தினால் தான் சங்கத்தின் மூலம் செலுத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்திற்கும் எதிரிக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக அவர் துாண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5. எங்களது தொடக்கபள்ளியின் தற்போதைய தலைமை ஆசிரியர் விஜயராணி ஆவார். நான் சொன்ன தேதியில் சொன்ன மாதிரி புகார் எதுவும் கொடுக்கப்படவும் இல்லை, நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை, எதிரி மீது பொய்யாக புகார் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி செல்வராஜ்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்துார் கிராமம் மொடக்குறிச்சி வட்டம்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
**CC.No. 45/2024**

Name : சதீஸ்குமார் (PW3)
Date: 04.07.2025
**சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் ஆங்கில ஆசிரியராக 2014லிருந்து பணிபுரிந்து வருகிறேன். பள்ளி யாருடைய கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். பள்ளியின் ஒரு பகுதியில் டிரஸ்ட் இயங்குகிறது அதில் பணியாளர் பணி செய்கிறார்கள் என்ற விபரம் தெரியும். அறக்கட்டளைக்காக நன்கொடை வழங்கும் நபர்கள் டிரஸ்ட் அலுவலகத்திற்கு சென்று தான் நன்கொடை செலுத்தி இரசீது பெறுவார்கள் என்றால் சரிதான். தலைமை ஆசிரியர் பணி என்பது ஆசிரியர்களின் பணியை கவனிப்பது என்றால் சரிதான். அறக்கட்டளை செயலாளர் SN. பாலசுப்பிரமணயத்திடம் தலைமை ஆசிரியர் டிரஸ்ட்க்காக பணம் கேட்கிறார் என்ற விபரத்தை சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

2. பள்ளி டிரஸ்ட்-ன் கீழ் இயங்குவதால் அறக்கட்டளை செயலாளரின் கட்டுப்பாட்டின் கீழ் தான் மற்ற பணியாளர்கள் உள்ளார்கள் என்ற விபரம் தெரியும். எதிரி என்னை மிரட்டினார் என்றும், நன்கொடையாக தொகை கேட்கிறார் என்ற விபரத்தை அறக்கட்டளை செயலாளர் SN. பாலசுப்பிரமணியத்திடமோ, பெற்றோர் ஆசிரியர் தலைவர் செல்வராஜிடமோ சொன்னேனா என்றால் இல்லை. அறக்கட்டளைக்காக தொகை செலுத்தி அறக்கட்டளைக்காக தலைமை ஆசிரியர் இரசீதில் கையெழுத்து செய்யமுடியாது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம்ரூ.5லட்சம் ரொக்கமாக இருந்தது என்பதற்காக ஆவணத்தை என்னிடம் புலன்விசாரணை செய்த அதிகாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.

3. நான் சொல்வது போல் அரச்சலூர் பஸ் நிறுத்தத்தில் வைத்து ரூ.5லட்சம் கொடுத்ததாக சொல்வதற்கு சாட்சி யாராவது உள்ளார்களா என்றால் செல்வராஜ் உடன் இருந்தார். நான் அறக்கட்டளை அலுவலகத்திற்கு சென்று ரூ.5லட்சம் கொடுப்பதற்காக முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் அரச்சலூர் பஸ்நிறுத்தத்தில் செல்வராஜ் முன்னிலையில் ரூ.5லட்சம் கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. நான் 10 ஆண்டுகளாக பணியில் உள்ளேன். 2018ல் மாத சம்பளம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் நான் சொல்லும் தேதியில் என் கையில் ரூ.5லட்சம் ரொக்கமாக இருந்ததற்கான

ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. நன்கொடை இரசீது வழங்க அதிகாரம் இல்லாத ஒரு நபரிடம் நான் நன்கொடை கொடுத்து இரசீது கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சம்பளத்திற்காக வருமானவரி செலுத்தி வருகிறேன். எனது வருமானவரியில் நன்கொடையாக அளித்த தொகையை காண்பித்துள்ளேனா காண்பிக்கவில்லை, மேற்படி தொகையை எனது உறவினரான சோமசுந்தரத்திடம் இருந்து வாங்கி கொடுத்தேன்.

4. தலைமை ஆசிரியர் பணத்தை வாங்கி ஏமாற்றிவிட்டார் என்பதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொன்ன தேதியில் எதிரியிடம் அரச்சலூர் பஸ்நிறுத்தத்தில் வைத்து ரூ.5லட்சம் ரொக்கம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்களுக்கு ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அறக்கட்டளை செயலாளரிடம் சொல்வோம். பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லும் தேதிக்கும் நான் கொடுத்ததாக சொல்லும் புகாரின் தேதிக்கும் இடைவெளி 5 மாதம் இருக்கும் நிலையில் தலைமை ஆசிரியர் மீது புகார் கொடுக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, ஏனென்றால் அறக்கட்டளை நிர்வாகத்திடம் நான் கொடுத்த தொகைக்கு இரசீது வாங்கி தருவதாக சொன்னதால் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை. நான் அறக்கட்டளையில் கொடுக்கும் பணத்திற்காக இரசீது கொடுக்க அதிகாரம் இல்லாத நபரிடம் பணம் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. பள்ளி நிர்வாகத்திற்கும் தலைமை ஆசிரியருக்கும் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்தின் தவறான தூண்டுதலின் பேரில் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி சதீஸ்குமார்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம் மொடக்குறிச்சி வட்டம்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXII Code of criminal procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
**CC.No. 45/2024**

Name : கார்த்திகேயன் (PW2)
Date: 04.07.2025
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எங்கள் பள்ளியில் டிரஸ்ட் அலுவலகம் தனியாக உள்ளது தெரியும். அந்த அலுவலகத்தில் என்னென்ன நடைமுறைகள் செயல்படும் என்று தெரியுமா என்றால் டிரஸ்ட்–க்கு கீழ் உயர்நிலை பள்ளி செயல்படுவதும், துவக்க பள்ளி செயல்படுவதும், விவசாயம் சார்ந்த பணிகள் செயல்படுவதும் தெரியும். அங்கு பணிபுரியும் தலைமை ஆசிரியர், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மற்ற ஊழியர்கள் அந்த அறக்கட்டளையின் செயலாளர் S.N. பாலசுப்பிரமணியம் அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் தான் செயல்படுவார்கள் என்றால் சரிதான். மேற்படி நிர்வாகத்தின் கீழ் செயல்படும் அறக்கட்டளையில் நன்கொடைகள் யார் பெறுவார்கள் எங்கு கொடுக்கவேண்டும் என்பதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. அறக்கட்டளை மூலமாக இரசீது கொடுப்பார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அந்த அறக்கட்டளையின் இரசீது யாரிடம் பணம் செலுத்தி யார் இரசீது தருவார்கள் என்று தெரியுமா என்றால் தெரியும். அறக்கட்டளை நிர்வாகி இரசீது தருவார். அறக்கட்டளையில் நன்கொடை தரவேண்டும் என்றால் அறக்கட்டளையில் யாரிடம் பணம் தரவேண்டும்என்றும், யார் இரசீது தருவார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். அறக்கட்டளைக்கு நன்கொடை தரவேண்டும் என்றால் அறக்கட்டளைக்கு சென்று தான் தரவேண்டும் என்றால் எதிரி நிர்வாகத்திற்கு நெருக்கமாக இருந்ததால் எதிரியிடம் கொடுத்தேன். நான் பணம் எதிரியிடம் கொடுத்ததாக சொல்லும் தொகைக்கு யார் இரசீது தருவார்கள் என்ற விபரம் தெரிந்து தான் கொடுத்தேனா என்றால் அறக்கட்டளை அலுவலகத்தில் இரசீது கொடுப்பார்கள் என்று தெரிந்து தான் எதிரியிடம் பணம் கொடுத்தேன்.

3. தலைமை ஆசிரியரான எதிரிக்கு அறக்கட்டளை இரசீதில் கையெழுத்து போடும் அதிகாரம் இல்லை என்றால் சரிதான். நான் கொடுக்கப்பட்டதாக சொல்லும் ரூ.1,50,000/–தொகை என் கையில் இருந்தது என்பதற்கான ஆவணங்களை புலன் விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னை பணி நிரந்தர நியமண ஆணை எப்போது பிறப்பிக்கப்பட்டது

என்றால் 11.04.2014 அறக்கட்டளை செயலாளரால் எனக்கு பணி நியமண ஆணை வழங்கப்பட்டு பணி நிரந்தரமாக மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்றத்தினால் 2018ம் ஆண்டு பணி நிரந்தம் செய்யப்பட்டேன், தேதி, மாதம் எனக்கு ஞாபகம் இல்லை. போலீஸார் விசாரணையின் போது 15.03.2018 ம் தேதி எதிரி பணம் கேட்டார் என்று சொல்லியிருந்தால் அது சரியா, தவறா என்றால் எதிரி பணம் கேட்டார் என்று சொன்னது சரிதான், தேதி ஞாபகம் இல்லை. யாரிடம் எதற்காக பணம் கொடுக்கவேண்டும் என்ன காரணத்திற்காக பணம் தரவேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

4. எனக்கும், எதிரிக்கும் வங்கி கணக்கு இருக்கும்பட்சத்தில் நான் கொடுத்ததாக சொல்லும் பணத்தை வங்கி மூலமாக ஏன் அனுப்பவில்லை என்றால் அறக்கட்டளைக்கு தருவதாக எதிரி குறிப்பிட்டதால் அதை நான் ரொக்கமாக கொடுத்தேன், அவர் வங்கிகணக்கிற்கு அனுப்பவில்லை. அறக்கட்டளையின் வங்கிகணக்கை எதிரியிடம் கேட்டு பணம் அனுப்ப நான் முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரி கொடுத்தாக சொல்லும் தொகை உண்மையிலேயே எதிரியிடம் கொடுக்காத காரணத்தினால் தான் நான் வங்கி மூலமாகவோ அல்லது நேரடியாக அறக்கட்டளை அலுவலகத்திலோ செலுத்தாமல் எதிரியிடம் கொடுத்தாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. நான் செயலாளர் பாலசுப்பிரமணியடம் கொடுத்த புகாரானது வழக்குக்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி பள்ளியின் அறக்கட்டளை செயலாளராக இருந்த மறைந்த எஸ்.என்.பாலசுப்பிமணியம் எதிரியான தலைமையாசிரியரை அந்த பள்ளியிலிருந்து இட மாறுதலில் செல்லுமாறு குறிப்பிட்டு அதை எதிரி ஏற்காமல் நான் நேர்மையாக நன்கு பள்ளியில் பணிபுரிவதால் பணி மாறுதல் செல்லமுடியாது என குறிப்பிட்டதால் எதிரி மீது எஸ்.என்.பாலசுப்பிரமணியம் பொய்யாக என்னையும் வசந்தி, அர்ஜுனன், சதீஸ், செல்வராஜையும், அழைத்து மேற்படி எதிரி மீது மேற்படியான புகாரை தருமாறு கேட்டு வாங்கி எதிரிக்கு எதிராக மேற்படி மோசடியான புகாரைக் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பாதிக்கப்பட்டதால் தான் நான் புகார் கொடுத்துள்ளேன். நான் உண்மையாகவே எதிரிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

6. நான், ஆசிரியர் வசந்தி, சதீஸ், செல்வராஜ், அர்ஜுனன் போன்ற நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்தை பார்த்து தான் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் மட்டும் சென்று புகார் கொடுத்தேன். ஆசிரியர் வசந்தி புகார் கொடுத்ததற்கு பின்னிட்டு எத்தனை நாட்கள் நான் புகார் கொடுத்தேன் என்றால் அது எனக்கு தெரியவில்லை. நான் எப்போது எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. எனது சம்பளத்திற்காக வருமான வரி தாக்கல் செய்து வருகிறேன். எனது

வருமானவரி கணக்கில் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் தொகை குறிப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. உண்மையில் நான் கொடுத்திருந்தால் அதை வருமானவரி கணக்கில் காண்பித்திருப்பேன் என்றும், உண்மையில் நான் கொடுத்திருந்தால் அறக்கட்டளை நன்கொடை கொடுக்கும் தொகைக்கு வருமானவரி விலக்கு உள்ளதால் அந்த காரணத்திற்காக நான் குறிப்பிட்டிருப்பேன் என்றும், எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்பதால் தான் அதை வருமானவரி கணக்கில் நான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல, எனக்கு வருமானவரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இல்லை.

7. நன்கொடைக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளதே தவிர வருமானவரி கணக்கு தாக்கல் செய்யும் போது அதை குறிப்பிடுவதற்கு தடை ஏதும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியவில்லை. நான் அறக்கட்டளை செயலாளர் SN பாலசுப்பிரமணியத்தின் தூண்டுதலின் பேரில் பொய்யாக எதிரிக்கு எதிராக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எதிரி அறக்கட்டளைக்கு பணம் தருவதாக சொல்லி பணம் வாங்கி ஏமாற்றியதாக சொல்வது குறித்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, அறக்கட்டளை செயலாளர் மூலமாகத்தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். எதிரி மிரட்டியதாக புகாரில் சொல்லியுள்ளதற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, நான் அறக்கட்டளை செயலாளரிடம் சொன்னேன். நான் அறக்கட்டளை செயலாளரிடம் கொடுத்த புகாரில் எதிரி மிரட்டியதாக சொல்லியுள்ளேன்.

8. ஏற்கனவே எதிரி மீதுள்ள விரோதம் காரணமாக அறக்கட்டளை செயலாளரால் தயாரிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால்சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

ஒம்/- சாட்சி கார்த்திகேயன்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்
எழுமாத்தூர் கிராமம் மொடக்குறிச்சி வட்டம்.